# கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

## "ஹிந்தி" மொழிக் கண்டனக் கூட்டம்.

## தோழர் த.வே.உமாமகேசுவரம் அவர்களின் வீரமுழக்கம்.

### கண்டனத் தீர்மானம் நிறைவேறியது.

(நமது நிருபர்)

தஞ்சை, ஆகஸ்டு 28—

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவின் கீழ் நேற்று மாலை 5-மணிக்கு ஹிந்தி கண்டனக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. தஞ்சையினின்றும், வெளியூர்களிலிருந்தும் ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் குழுமியிருந்தனர்.

செந்தமிழ்ப் புரவலர்-இராவ் சாகிப் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை எல்லோரையும் வரவேற்றுப் பேசுகையில் கூறியதாவது:— "இன்று இக்கூட்டத்திற்குத் தலைமைவகிக்கத் தோழர் வி. நாடிமுத்துப் பிள்ளை வருவதாக ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் இன்று அவரிடமிருந்துவந்த கடிதமொன்றில் நான் காங்கரஸ் கட்சியிலுள்ளவனாதலால் தலைமை வகிக்க வரமுடியவில்லை. ஆனால் கூட்டத்திற்கு வருகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். காரணம் எதுவானாலும் அவர்கள் அகச்சான்றிற்கு இது சிறிதும் பொருந்தாது என்றே கொள்ளவேண்டும். தமிழ்க்குத் தீங்கு வருங்கால் பேசாது, ஒழுங்கு நடவடிக்கைக்குப் பயந்து உண்மைக் கருத்தை வெளியிடத் தயங்கிக் கோழையாயிருப்பது ஆண்மைத் தமிழனுக்கு அழகாகுமா? எனவே, நாம் காலம் தாழ்த்தல் கூடாது. விரைந்துஆவன புரிதல் வேண்டும். பேச்சு உரிமை வேண்டும். உள்ளத்தில் பட்ட கருத்தை வெளியிட ஒவ்வொருவருக்கும் உரிமை வேண்டும் எனக்காங்கரஸ்காரர் வாயளவில் கூறுகின்றனர் ஆனால் செய்கையிலோ, வடநாட்டார் எதைச் சொன்னாலும் ஆராயாது ஏற்றுக் கொண்டு நம்மைத் தங்கள் கைப்பாவை போல் இயக்க விரும்புகின்றனர். என்னே அவர்கள் அறிவின்மை! நெஞ்சாரக் கண்டதைப் பிறருக்காகவிட்டுக் கொடுத்தல் தமிழருக்கு அடுக்காது. வீரப் பெண்களும் 'நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' என்று ஆண்மையுடன் கூறிய நக்கீரனும் இருந்த நாடு நம் தமிழ் நாடு. தலைவர்க்காகத் தன் மனதில் பட்ட உண்மைகளை வெளியிட அஞ்சுவது, பின்னிடுவது மதியீனம்! மதியீனம்!! என்று பலமுறை அறை கூவுவேன். உயிரை விடினும் மானத்தை விடக்கூடாது. தாய்க்குச்சோறுபோடாதிருத்தல் கூடாது. அவ்வாறு இருப்பார் செய்கை "தாய்க்கொலை சால்புடைத்து" என்பார் கூற்றுக்கே ஒப்பாகும். எனவே, நம் முயற்சிக்கும் பல இடர்கள் வரும். ஆனால் நாம் ஆண்மையுடன்— வினைத்திட்பத்துடன் எடுத்ததை முடிக்க வேண்டும்."

பின்னர்வக்கீல்தோழர்வெங்கடாசலம் பிள்ளை பி.ஏ.பி.எல். அவர்களைக் கூட்டத்திற்கு தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொண்டார். திரு. வேங்கடாசலம் பிள்ளையவர்கள்எதிர்பாராதவகையில் தன்னை தலைமை வகிக்க வேண்டுமாறு கூறியதற்காக வந்தனம்செலுத்திவிட்டுத் தோழர் உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் ஹிந்தி கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வருவார் எனக் கூறியமர்ந்தார்.

"ஹிந்தியை 1, 2, 3-வது பாரங்கட்குக் கட்டாய பாடமாக வைப்பதுடன், மேல் வகுப்புகட்கு சரித்திரபாடத்தை ஹிந்தியில் பயிற்றுவித்தல்வேண்டும் என அரசியலார் செய்யும் முடிவை கரந்தைத்தமிழ்ச்சங்க ஆதரவின் கீழ்க்கூடியுள்ள தஞ்சைப் பொது மக்கள் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்."

என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து விளக்கிக் கூறுகையில், ஆங்கிலம், கணிதம், சரிதம், உளநூல், பௌதிக நூல், பூதநூல், தாவரநூல், எனச்சுமக்கமாட்டாத பல பாடங்களைச் சிறுவர்கள் தலையில் ஏற்றியிருக்கையில் ஹிந்தியையும் சிறுவர்கள்கற்க வேண்டுமென்பதுபொருந்துமா ஜர்மனி, பிரஞ்சு, ஜப்பான் முதலிய நாடுகளில் அயல் மொழி மூலம் கல்வி கற்றல் கிடையாது. சென்ற 350-ஆண்டுகளாய் ஆங்கில ஆட்சியில் நம் தமிழ் பாழ்பட்டது. 1910-ம் ஆண்டு அரசியல் செல்வாக்கு பெற்ற கல்வி இலாகா டைரக்டர் தோழர் வி. கிருஷ்ணசாமி அய்யர் தமிழைக் கட்டாயபாடமாக்கக் கூடாது என்றார். அதனை அரசியலாரும் ஒப்பினர். அக்காலம் தான் நம் கரந்தைத் தமிழ்ச்சங்கம் தோன்றியது. இதுவரை நம் சங்கம் செய்த கூக்குரல் கடல்வரை எட்டியது. மக்கள் கிளர்ச்சி செய்தனர். அதன் பயனாக இன்று ஆங்கிலம் தவிர மற்ற பாடங்களைத் தமிழ் மொழியில் கற்க அரசாங்கத்தார் உத்வி செய்தனர். இதையொட்டி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் தர்க்கம், இயைபுநூல், பூதநூல், ஒலிநூல் முதலியவைகளைத் தமிழில் எழுதுவித்துப் பாடமாக்க முனைகின்றனர். இந்நிலையில் ஹிந்தி வந்தால் தமிழ் நிலைஎன்னாவது? காந்தி, ஜவஹர் போன்றவர்களும் நம்மிடம் பேச வாயில்லாத ஊமையர்களாய் 'சாத்தான் சர்க்கார்' மொழியாகிய ஆங்கிலத்திலேயே பேசுகின்றனர். நம்முடன் உறவாட அவர்கள் ஏன் தமிழ் கற்றல் கூடாது? நம்மவர் வடநாட்டார்க்கு அடிமையாய்— தன் மதிப்பின்றி 'நீர் வழிச் செல்லும் புணைபோல்' வடநாட்டார் கூறியதையே கிளிப்பிள்ளைகள் போல் கூறி வருகின்றனர். இது கொடுமை! கொடுமை!! கொடுமை!!!

'ஹிந்தி' வந்தால் வடமொழியாளருக்குச் சுலபமாகலாம்! ஹிந்தி, பட்லர் இங்கிலீஷைப் போல் மொகலாயர் காலத்தில் தோன்றிய ஒரு கதம்பமொழி. அதற்கு எழுத்துண்டா? இலக்கியமுண்டா? நாகரிகத்தில் தாழ்ந்த 'இலம்பாடிகள்' பேச்சைப்போன்ற மொழி. இவர்கள் செய்கை இந்நிலையில் 'மக்களே போலும் கயவர்' என்ற பெரியாரின் வாக்கை நினைவூட்டுகின்றது. வடநாட்டினருடன் பேச—உறவாட ஹிந்தி பயன் பெறுமாம்! ஒருவேளை ஏன் இறுதிக் காலத்தில் நான் காசியாத்திரை போகுங்கால் பீடி, சுருட்டு விலை பேசிவாங்கவும் ஜட்கா வண்டிக்காரனுடன் பேசவும் வேண்டுமானால் உதவி செய்யும்! ஜவகர் ஓரிடத்தில் சிறந்த மொழிகளில் தமிழையும் ஒன்றாகக் குறிப்பிடுவதுடன், அவரவர்கள் தாய் மொழியைப் புறக்கணிக்காதீர்கள்; ஹிந்தியைப் பொதுப் பேச்சிற்காக வேண்டுமானால் கற்றுக்கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார். ஆனால் நம்மவர் போல் கோழைகளாய் போலி வேடம் போடவில்லை இன்னும் நம்நாட்டில் 100க்கு 90 பேர் சரியாக எழுதப்படிக்கத் தெரியாத நிலையிலிருக்கின்றனர். எனவே 100 பேரும் எழுதப்படிக்க நிலைவந்த போது ஹிந்தியைப் பற்றிப் பேசிக் கொள்ளுவோம். ஆனால் இது, படித்த பட்டதாரிகளின் எண்ணிக்கையைக் குறைக்கச் செய்யும் வழி—சூழ்ச்சியென நினைக்கவேண்டியிருக்கின்றது. ஏன்? அதை வெளிப்படையாகச் சொல்லிவிடுகின்றதுதானே! அரசியல் ஆட்சி முறையே இன்னதென்று தெரியாதவர்கள்—பழக்கமில்லாதவர்கள் எங்ஙனம் ஆட்சி நடத்துவர்? குருட்டாம் போக்கில் வந்த வெற்றியினால் தலைகால்தெரியாது குதிக்கின்றனர். ஏன் தௌரவமாக எங்கட்கு ஆட்சி முறை--அரசியல் நடாத்தும் முறை தெரியவில்லை என்று கூறிவிடுவதுதானே! எனவே அவர்கள் செய்ய எண்ணும் அறியாச் செயலை தமிழ் நலங் கருதும் ஒவ்வொருவரும் கண்டித்தல் வேண்டும் என்பதோடு இத் தீர்மானத்தை ஒப்புக்கொள்ளுவீர்கள் என்ற முறையில் உங்கள் முன் கொண்டு வருகிறேன் எனக்கூறி முடித்தார்.

தஞ்சைக் காங்கரஸ் வாதி தோழர் மருதமுத்து மூப்பனார், வக்கீல் தோழர் ஜெ. எம். சோமசுந்தரம் பிள்ளை, திருவையாற்று அரசர் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் தோழர் ஆர். வெங்கடாசலம் பிள்ளை, கரந்தைத் தமிழ்ச் சங்க கல்லூரி தலைமையாசிரியர் தோழர் சிவ. குப்புசாமிப் பிள்ளை முதலியோர் தீர்மானத்தை ஆதரித்துப்பேசக் கடைசியில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

தலைவர் முடிவுரைக்குப்பிறகு திரு. த. வே. உமாமகேசுவரம் நன்றி கூறுகையில் நம் பேச்சு ஒவ்வொன்றும் தலைவர்கள் காதில் போய் விழவேண்டும். அதனால் அவர்கள் தங்கள் அறியாப்போக்கைத் திருத்திக் கொள்ளவேண்டும். நிற்க, ஹிந்தியைத் தங்கள் கழகத்தின் சார்பாகக் கண்டிக்க வேண்டும் என்று மாணவர்கள் கேட்டதற்காகத் திருவையாற்றிலுள்ள ஒரு சாஸ்திரியார் கண்டவாறு மாணவர்களைத் திட்டி, பயமுறுத்தி விரட்டினாராம்! என்னே அவர்தம் வன்கண்மை! இன்றே அப்பார்ப்பனர்களின் ஆர்ப்பாட்டம் இங்ஙனமிருந்தால் அவர்கள் கோரும் "ராமராஜ்யம்" வந்தால் நம் நிலை என்னாவது? எனவே நீங்கள் சிறிதும் அஞ்சாது பட்டிமாடுகளாகிய ஹிந்தி முதலியவற்றை ஓட்டி தமிழை முன்னேற்றுங்கள் என்று பேசினார். கூட்டம் 9 மணிக்கு முடிக்தது.

# கிராமங்களில் புத்தகசாலை வைக்கவேண்டும்.

### தோழர் போசிலின் யோசனை.

தஞ்சாவூர், ஆகஸ்டு 31

இவ்வூர் ஸ்டார் எக்செல்ஸர் லைப்ரரி சங்கத்தின் ஆதரவில் அட்வொகேட் தோழர் டி. வி. சடகோபாச்சாரியார் தலைமையில் சென்னை தோழர் எஸ் எம். போசில் பேசினார்.

பொதுவாக நாட்டின் மக்கள் அறிவு பெற்று வரவேண்டுமானால் போதிய புத்தகசாலைகள் வேண்டும் என்றும் ஜனநாயகத்துவப்படி ஆட்சி நடக்கிற நாடாயிருப்பதால் ஒவ்வொருவருக்கு போதிய கல்வி அறிவில்லாமல் தேர்ந்தெடுத்து அனுப்புகிற மந்திரிகளை தக்க முறையில் நடத்த முடியாதென்றும் விளக்கிப் பேசினார்.

இதனால் கிராமங்களில் எத்தனை புஸ்தகசாலைகள் ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு சாலைகள் ஏற்படுத்தவேண்டும் என்பதை வற்புறுத்திப்பேசினார்.

அதன் பிறகு அவர் அரண்மனை வாசகசாலையையும், ஜில்லாபோர்டு வாசகசாலையையும் பார்வையிட்டார்.

### சர். மிர்சா வருகை

(ஒரு நிருபர்)

பங்களூர், ஆகஸ்டு 28

இன்று காலை மைசூர் திவான் சர். மிர்சா எம். இஸ்மெயில் ஜாவாவுக்குச் சென்றவர் இன்று திரும்பினார்.